# THE FXEC TIMES தமிழ்

Empowering your Future

www.francisxavier.ac.in
facebook.com/fxengg/
instagram.com/fx_ec/

மலர் - 1
இதழ் - 2

ஜூன் 2022


ARIIA ATAL RANKING OF INSTITUTIONS ON INNOVATION ACHIEVEMENTS
Out of 14,505 Technical Institutions, FXEC has been ranked one among 96 top Institutions in India.

Four Star Status by the Ministry of Education, Govt. of India.
For Innovation and Entrepreneurship Activities

CII PLATINUM RATING
FXEC has been awarded with PLATINUM RATING FOR THE YEAR 2020 by AICTE-CII Survey of Technical Institutes, 2020 among 814 Institutes in India

NBA NATIONAL BOARD of ACCREDITATION

# எப்.எக்ஸ். கல்லூரியின் ஜூபிளண்ட்விழா (Jubilant Day) 729 மாணவர்களுக்கு பணி நியமன ஆணை!

2021-2022 கல்வி ஆண்டில் பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கும் ஜூபிளண்ட்விழா 2022 (Jubliant Day) பெற்றோர்கள் முன்னிலையில் APJ அப்துல்கலாம் அரங்கில் மிக சிறப்பாக நடைபெற்றது. விழாவில் SCAD கல்வி குழுமங்களின் நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ்பாபு, கலந்து கொண்டு, தலைமை உரையாற்றினார். மாணவர்களையும், அவர்களின் பெற்றோர்களையும் பாராட்டி, வேலை வாய்ப்பு பணி நியமன ஆணைகளை வழங்கி கௌரவித்தார்.

அமேசான் (Amazon), சோ கோ (Zoho), டிசிஎஸ் (TCS), குவால்காம் (Qualcomm), ஹெக் சாவெர் (Hexaware),மிராஃபிரா (Mirafra), விப்ரோ (Wipro), ராகுட்டன் (Rakuten), கார் டெக் னாலஜிஸ் (Kaar Tech nologies), அட்டோஸ் (Atos), கேப் ஜெமினி (Capgemini), ஐ வெய்வ் (Iwave), நேஷனல் இன்ஸ்ட்ரு மென்ட்ஸ் (National Instruments), இன்போசிஸ் (Info sys), மைட்பாப்ஸ் (Mydbops), வெப்பராக்ஸ் (Web berax), சக்தி ஆட்டோ காம்போ னென்ட்ஸ் (Sakthi Auto Components), ரெனால்ட் நிசான் (Renault Nissan), சிர்மா (Syrma), ஸுசி (Zuci), வின்சின்ஃபோ (Vinsinfo), பேஸ் ஆட்டோ மேஷன் (Base Automation), வாப்கோ (Wabco), நீயாமோ (Neeyamo), சிட்டிசன் (Centizen), க்யூ மேக்ஸ் (Q Max systems), விகான் ப்ரோ (Vican Pro), டெக் மகேந்திரா (Tech Mahindra), மொபியஸ் (Mobius), விர்சியுசா (Virtusa) மற்றும் பல முன்னணி நிறுவனங்களில் இருந்து 729 பணி நியமன ஆணைகளை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் பயிலும் இறுதியாண்டு மாணவ, மாணவியர் பெற்று கொண்டனர். மாணவர்களை நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ்பாபு பாராட்டினார்.




ஸ்காட் கல்வி குழும நிறுவனர் s.கிளிட்டஸ் பாபு மாணவ, மாணவியருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கியும், பெற்றோர்களுக்கு பொன்னாடை அணிவித்தும் வாழ்த்தினார்.

இதற்காக டெக்சாஸ் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் (Texas Instruments), டீப் லேர்னிங் (Deep learning), சி.டி.எ.சி ஐ.ஓ.டி (CDAC IoT), ஐ.பி.எம். கம்ப்யூட்டிங் (IBM Cloud computing), மொபைல் அப்ளிகேஷன் டெவெலப் மென்ட் (Mobile application Develop ment), பிரிடெக்ட்டிவ் பிசினஸ், அனலைடிக்ஸ் (Predictive Business Analytics), ஹாக்கத் தான் லேப் (Hackathon lab), எலக்ட்ரானிக்ஸ் அப்ளிகேஷன் லேப் (Electronics application Lab), சிஸ்கோ நெட்வொர்க்கிங் லேப் (CISCO Networking Lab), டேட்டா சயின்ஸ் லேப் (Data Science Lab), நி (NI), ரோபோடிக்ஸ் அண்ட் ஆட்டோமேஷன் லேப் (Robotics and Automation Lab ஃபாபிரிகேஷன் லேப் (Fabrication Lab), மாடலிங் லேப் (Modeling Lab), வேர்ல்ட் ஸ்கில் லேப் (world Skill Lab), அட்வான்ஸ்ட் தெர்மல் அனலைசிஸ்/சோலார் (Solar), அமேசான் செர்விக்ஸ் லேப் (Amazon web) என்வைரான் மென்ட்டல் அனலைசிஸ் என தொழில் நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆய்வகங்கள் கல்லூரி வளாகத்தில் உருவாக் கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கும் வேலை வாய்ப்பினை வழங்கி, அவர்களின் எதிர்காலத்தை வளமாக்கிய கல்லூரி நிர்வாகத்திற்கு விழாவில் கலந்து கொண்ட பெற்றோர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தனர். படிக்கும் போதே, இந்த அரிய திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி வரும் கல்லூரியின் பொதுமேலாளர் (வளர்ச்சி) முனைவர் K.ஜெயக்குமார் பொதுமேலாளர் (நிர்வாகம்) திரு S.கிருஷ்ணகுமார், முதல்வர் முனைவர் V.வேல்முருகன், வேலைவாய்ப்புத்துறை டீன் முனைவர் A.ஞானசரவணன், பயிற்சித்துறை டீன் முனைவர் S.பாலாஜி, தொழில் முனைவோர் துறை இயக்குநர் முனைவர் லூர்டஸ் பூபாலராயன், கல்விசார் துறைப் பேராசிரியர் முனைவர் L.R.பிரியா, வளாக மேலாளர் திரு J.சகாரியா கேபிரியேல், பேராசிரியர் முனைவர் கரோலின், பேராசிரியர் முனைவர் J.ஜாஸ்பெர் ஞானச்சந்திரன், பேராசிரியர் J.டேவிட் அய்லிங், முக்கிய நிர்வாகிகள், பேராசிரியர்கள் அனைவரையும் கல்லூரி நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் C.அருண் பாபு ஆகியோர் பாராட்டினர்.



அபிஷேக் பாஸ்கரன் (MECH)

## வேலைவாய்ப்பு அளித்த கல்லூரி நிர்வாகத்திற்கு மாணவிகள் பாராட்டு



திவ்யலக்ஷ்மி (EEE)



மஹாலஷ்மி (CSE)



கிறிஸ்டியனா (ECE)



கௌரி ( ECE)



நிறுவனர் s.கிளிட்டஸ் பாபு உரையாற்றினார்.



விழாவில் பங்கேற்ற மாணவர்களின் பெற்றோர்கள் கல்லூரி நிர்வாகத்தை மனதார பாராட்டினர்.

## வேலைவாய்ப்பு அளிக்கும் சிறந்த கல்லூரி: நியூஸ்-18 சேனல் சார்பில் 'கற்றல் விருது-2022'



அமைச்சர் க.பொன்முடி வழங்கினார்




கற்றல் விருது-2022

தென்தமிழகத்தின் சிறந்த வேலை வாய்ப்பு அளிக்கும் பொறியியல் கல்லூரியாக நியூஸ் 18 தொலைக் காட்சி பிரான்சிஸ் பொறியியல் கல்லூரியைத் தேர்வு செய்தது. இதற் கான கற்றல் விருதை தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி ஸ்கர்ட் குழும நிறுவனர் S.கிளிட்டஸ் பாபு அவர்களிடம் வழங்கினார்.

இந்த விழாவில் பேசிய அமைச்சர் பொன்முடி, உயர்கல்வி மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதில் கல்லூரிகள் சிறந்து விளங்க வேண்டும் என கேட்டு கொண்டார்.

ஒரு வலுவான தேர்வு அடிப்படையில் உயர் கல்வியில் தலைச் சிறந்த கல்லூரிகள் தேர்வு செய்யப் படுகின்றன. இந்த ஆண்டு நடுவர் குழுவினர் பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியை 2022ம் ஆண்டுக்கான சிறந்த கல்வி நிறுவனமாகவும், தென் தமிழகத்தில் மாணவர்களுக்கு வளாக வேலைவாய்ப்பு (Campus Placement) அளிப்பதில் சிறந்து செயல்பட்டதற்காக நியூஸ்-18 தொலைக்காட்சி சார்பில் 'கற்றல் விருது-2022'- க்காக தேர்வு செய்தது குறிப்பிடத் தக்கது இந்த விருது விழா சென்னை கிண்டி ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது. இந்த விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, ஸ்காட் கல்வி குழும கல்லூரி நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு அவர்களிடம் கற்றல் விருது வழங்கி பாராட்டினார். இந்த ஆண்டு கல்லூரிக்கு விருது கிடைத்ததற்காக அவர் நன்றி தெரிவித்து கொண்டார். .

## எப்.எக்ஸ் கல்லூரி- அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து முகாம்

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கமும் அரவிந்த் கண் மருத்துவமனையும் இணைந்து 'விஷன் ஸ்கிரீனிங் கேம்ப்பை'(Vision screening camp) ஏற்பாடு செய்தது. இதில் சுமார் 300 மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியின் தொடக்கமாக இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் தன்னார்வலர்களை கல்லூரி முதல்வர் முனைவர் வி.வேல் முருகன் பாராட்டினார். இதனை தொடர்ந்து அரவிந்த் கண் மருத்துவமனையின் முதுநிலை ஆலோசகர் டாக்டர் காயத்ரி கண் பார்வையை நன்றாகப் பராமரிப்பது குறித்த உள்ளீடுகளை வழங்கினார். இந்நிகழ்வை கல்லூரி வளாக மேலாளர் சகாரியா கேப்ரியல் மற்றும் ஒருங்கிணைப்பாளர் J.டேவிட் அய்லிங் ஆகியோர் செய்திருந்தனர்.



இந்நிகழ்ச்சிக்கு ஊக்கம் அளித்த கல்லூரி பொதுமேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார் மற்றும். S.குமார் உள்ளிட்டோரை SCAD குழும நிறுவனர் தலைவர் முனைவர் கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் அருண் பாபு பாராட்டினார். கல்லூரி நிர்வாகத்திற்கு இளைஞர் செஞ்சுலுவை சங்கத்தினர் நன்றி தெரிவித்தன

# கம்ப்யூட்டர் சயின்ஸ் துறையின் 18வது தேசிய கருத்தரங்கு!

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் கணினி துறை சார்பில் 18வது தேசிய அளவிலான கருத்தரங்கு நடைபெற்றது. இதில் பல்வேறு கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட 120 மாணவ, மாணவியர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

நெல்லை வண்ணார் பேட்டை பொறியியல் கல்லூரியில் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் 18 வது தேசிய கருத்தரங்கு நடைபெற்றது. இதில் கல்லூரியின் கணினித் துறை மாணவர்களின் திறமையை வெளிக்கொணரும் வகையில் பல்வேறு போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் பல்வேறு பொறியியல் கல்லூரி மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இந்த கருத்தரங்கில் பல்வேறு முன்னணி நிறுவனங்களின் முக்கிய பொறுப்புகளில் சிறப்பாக பணியாற்றும் முன்னாள் எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி மாணவர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். சோகோ (ZOHO) நிறுவனத்தில் வெப் டிசைனராக பணியாற்றும் 2014 ஆம் ஆண்டு மாணவர் திரு. சங்கர் பேசுகையில், கல்லூரியில் பயிலும் போது கல்லூரி பேராசிரியர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு கடின பயிற்சி அளித்த நினைவுகளையும், கல்லூரி நிர்வாகம் அளித்த ஊக்கத்தையும் பகிர்ந்து கொண்டார்.

மேலும், தொழில் ரீதியான ஆலோசனைகளையும் மாணவர்களுக்கு வழங்கினார். அவரைத் தொடர்ந்து, தொழில் நுட்ப வல்லுநர் வேல்முருகன், வால்மார்ட் நிறுவனத்தில் பணி புரியும் ஜெகன், சவுத் ரிஷ்னா (south Rishna) நிறுவனத்தில் பணியாற்றும் துர்கா ஆகியோர் தொழில் நிறுவனத்தில் திறமையுடன் பணியாற்றுவது குறித்து சிறப்புரை ஆற்றினார்கள். கணினித் துறை உதவி பேராசிரியர் மனோகர் தலைமையுரை ஆற்றினார். இதனையடுத்து கணினித் துறை கணினி துறை செயல்முறை விளக்கம் வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து கணினித் துறை சார்பில் 9 வகையான தொழில் முறை கருத்தரங்கு போட்டிகள் நடை பெற்றன.



கணினித் துறை செயல் முறை விளக்கம் வெளியிடப்பட்டது

இந்த கருத்தரங்கில் கணினி துறை அலுவலக பணியாளர்கள் சாம், சூர்யன், ஜின்டோலின், சங்கீதா கலந்துகொண்டனர்

இதில் அறிக்கை சமர்ப்பித்தல், திட்டப்போட்டி, சிறந்த வடிவமைப்புகள்,CODE-D-BUGGINGS, போட்டோகிராபி. குறும்படம் வெளியிடல் ஆகியவை நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்தக் கருத்தரங்கு நடைபெறுவதற்கு ஊக்கமும், உற்சாகமும் அளித்த கல்லூரி பொது மேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார், திரு s.கிருஷ்ண குமார், முதல்வர் முனைவர் v.வேல்முருகன், பேராசிரியர் அரவிந்த் சுவாமிநாதன் உள்ளிட்டோரை கல்லூரி நிறுவனர் கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் அருண்பாபு ஆகியோர் பாராட்டினர்.

## அண்ணா பல்கலை.யில் நடந்த தேசிய கருத்தரங்கில் முதல் பரிசு!




திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழகம் மண்டல வளாகத்தில் தேசிய அளவிலான கருத்தரங்கு நடைபெற்றது. இதில் தேசிய அளவில் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் இருந்து மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டியில் பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியை சேர்ந்த எலக்ட்ரிகல் அண்ட் எலக்ட்ரானிக் துறையில் 3ம் ஆண்டு பயிலும் ரோபோடிக்ஸ் மற்றும் ஆட்டோமேஷன் ஆய்வக மாணவர்கள் S.பிரகாஷ் ராஜ் மற்றும் முத்து விக்னேஷ்வரன் ஆகியோர் காகித விளக்கக்காட்சியில் பங்கேற்று முதல் பரிசை வென்றனர். துறையின் பேராசிரியர் முனைவர் A.ரவியின் வழிகாட்டுதலின்படி மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொண்டனர்.

இந்த கருத்தரங்கை நடத்துவதற்கு ஊக்கம் அளித்த கல்லூரி பொதுமேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார், S.கிருஷ்ணகுமார், கல்லூரி முதல்வர் V.வேல்முருகன், துறைத் தலைவர் முனைவர் ஆர்.சாமுவேல் ஹேன்சன் உள்ளிட்டோரை கல்லூரி நிறுவனர் S.கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் அருண் பாபு ஆகியோர் பாராட்டினர்.




அமெரிக்கன் சொசைட்டி ஆஃப் மெக்கானிக்கல் இன்ஜினியர்ஸ் மாணவர் பிரிவு தொடக்கவிழா நடைபெற்றது. இதில், கல்லூரி முதல்வர் வேல்முருகன், ஜி.சிமியோன், உதவி இயக்குநர், எம்.எஸ்.எம், வளர்ச்சி நிறுவனம், திருநெல்வேலி (கிளை), முனைவர் சாமுவேல் ஹேன்சன் (HOD.MECH) முனைவர் M.கண்ணன், (Mech) ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். மாணவர்கள் பிரிவு சார்பில் பிரவின் மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மெக்கானிக்கல் துறை WYVERNZ-2K-22 தேசிய தொழில்நுட்ப கருத்தரங்கு!

நெல்லை வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியின் இயந்திரவியல் துறையின் சார்பில் தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கு மற்றும் தொழில்நுட்ப போட்டிகள் நடைபெற்றது. இதில் ஆர்வத்துடன் கலந்துகொண்ட மாணவர்களுக்கு ரொக்கப் பரிசு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியின் இயந்திரவியல் (mechanical) துறை சார்பில் (WYVERNZ-2K-22) தேசிய கருத்தரங்கு நடத்தியது. இதில் பல்வேறு தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்தக் கருத்தரங்கில் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில், இயந்திரவியல் துறைத் தலைவர் முனைவர் ஆர்.சாமுவேல் ஹேன்சன் வாழ்த்துரை வழங்கினார். பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் வி.வேல் முருகன் தலைமையுரையாற்றினார். பொதுமேலாளர் (நிர்வாகம்) S.கிருஷ்ணகுமார் வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் சிறப்புப் பேச்சாளராகப் பங்கேற்ற மெர் சிடஸ் பென்ஸ் கார் (Mercedes-Benz) நிறுவன பொறியாளர் (வளர்ச்சி) திரு. தனசேகர் மெக்கானிக்கல் மாணவர்களுக்கான வேலைவாய்ப்புகள் மற்றும் அவர்களின் எதிர்காலப் பணிகள் குறித்து ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்கினார். இதனை தொடர்ந்து நடந்த போட்டிகளில், அறிக்கை சமர்ப்பித்தல், தொழில்நுட்பம் சார்ந்த போட்டிகளும், தொழில்நுட்பம் சாராத போட்டிகளும் நடைபெற்றன. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல் ரொக்கப் பரிசு ஆயிரம், 2வது பரிசு ரூ.500-ம் வழங்கப்பட்டது அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.




மெர்சிடஸ் பென்ஸ் நிறுவன பொறியாளர் தனசேகர் உரை

இந்த கருத்தரங்கை நடத்துவதற்கு ஊக்கம் அளித்த கல்லூரி பொதுமேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார், S.கிருஷ்ணகுமார், கல்லூரி முதல்வர் V.வேல்முருகன், துறைத் தலைவர் முனைவர் ஆர்.சாமுவேல் ஹேன்சன் உள்ளிட்டோரை கல்லூரி நிறுவனர் S.கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் அருண் பாபு ஆகியோர் பாராட்டினர்.

## கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி புகைப்பட கண்காட்சி எப்.எக்ஸ். கல்லூரி மாணவர்கள் பார்வையிட்டனர்!

தமிழக அரசின் செய்தித்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கப்பலோட்டிய தமிழன் 150வது பிறந்த நாளை முன்னிட்டு வ.உ.சி. வாழ்க்கை வரலாறு நகரும் புகைப்பட கண்காட்சியை பிரான்சிஸ் சேவியர் கல்லூரி அனைத்து துறை மாணவர்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் தமிழக அரசின் செய்தித்துறை சார்பில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. வாழ்க்கை வரலாறு இடம் பெற்ற நகரும் புகைப்பட கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த பேருந்தில் வ.உ.சி. சிறையில் செக்கிழுத்த செக்கு, அவரது வாழ்க்கை வரலாறு, சுதந்திர போராட்டத்தில் அவரது பங்கு, ஆங்கிலேயருக்கு நிகராக அவர் தூத்துக்குடி துறைமுகத்தில் கப்பல் போக்குவரத்தை தொடங்கியது போன்றவை இடம் பெற்றிருந்தது.




கண்காட்சியை பார்வையிட்ட மாணவிகள்.

அதனை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி அனைத்து துறை மாணவ, மாணவியர், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர். வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்று கண்காட்சி பயனுள்ளதாக இருந்தது.

இந்நிகழ்விற்க்கான ஏற்பாடுகளை கல்லூரி பொது மேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார், s.கிருஷ்ணகுமார், கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன், வளாக மேலாளர் பேராசிரியர் சகாரியா கேபிரியல் ஆகியோர் செய்திருந்தனர்.

## ஐ.டி - ஐடியேஷன் ஆய்வகம் இணைந்து ஸ்மார்ட் தயாரிப்பு 2 நாள் பயிலரங்கம்!

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் ஐ.டி துறையுடன் இணைந்து ஐடியேஷன் (Ideation) ஆய்வகத்தால் முதலாவது ஆண்டு மாணவர்களுக்காக ஸ்மார்ட் தயாரிப்பு வடிவமைப்பின் அடிப்படைகள் குறித்த 2 நாள் பயிலரங்கம் ஏற்பாடு செய்யப் பட்டது.

எப்.எக்ஸ். கல்லூரியில் உள்ள Ideation Lab மாணவர்களின் படைப்பாற்றல், புதுமை மற்றும் திறன்களை அவர்களின் யோசனைகள் மூலம் வெளிக்கொணரவும், எதிர்கால தொழில்நுட்பங்களுடன் பழகுவதற்கும் அவர்களை ஊக்குவிக்கவும் இந்த 2 நாள் பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஸ்பேசிஸி பிரைவேட் லிமிடெட் (Spacezee Pvt. Ltd) நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி பொறியாளர் ஹரிகரன் பயிலரங்கத்தின் நிபுணராக செயல்பட்டு கணினி துறை, ஐ.டி துறை, ECE & CSBS ஆகிய துறைகளைச் சேர்ந்த 30 மாணவர்கள் பயிலரங்கில் கலந்து கொண்டனர்.

முதல் நாள் பயிலங்கத்தில், மைக்ரோ கண்ட்ரோலர்கள் மூலம் நிரலாக்கம் மற்றும் சென்சார்களுடன் பணிபுரிதல், சென்சார்களை ஒருமுகப்படுத்துதல், அதன் சிக்கலைக் கண்டறிதல், வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு மேம்பாடு குறித்து மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது..

இரண்டாம் நாள் பயிலங்கத்தில், கல்லூரி மாணவர்கள் தங்களது தயாரிப்புகளின் கூறுகள், வடிவமைப்பு, நெறிமுறைகள் மற்றும் தகவல் தொடர்பு, சேனல்களை எவ்வாறு தேர்வு செய்வது என்பது குறித்த யோசனைகள் வழங்கப் பட்டன. ஒரு சிக்கலைத் தேர்வு செய்யவும், அதன் அறிக்கையை விவரிக்கவும், மூளை, புயல், வடிவமைப்பு முறைகள் மற்றும் அவைகளின் தீர்வுக்கான முன்மாதிரியை உருவாக்கவும், மாணவர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். துறை மாணவர்கள் செயல்திறனுடனும் தீவிரமாகப் பங்கேற்றும் முன்மாதிரிகளை உருவாக்கி தங்கள் குழுக்களுடன் வழங்கினர்.



ஸ்மார்ட் வடிவமைப்பு பணியில் மாணவ, மாணவியர்





ஐ.டி துறை- ஐடியேஷன் (Ideation) ஆய்வக மாணவர்கள்

## எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் துறை சார்பில் பயிற்சி பட்டறை



எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் பொறியியல்துறை சார்பில் முறையாக சிந்தித்து செயல்படுங்கள்' என்ற கருப்பொருளுடன், 'பிரேக் தி கிளாஸ்' குறித்த ஒரு பயிற்சி பட்டறையை ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் முக்கிய அம்சங்கள், "நிலையான உயர் செயல்திறனை அடைவதற்கு சிக்கலான தன்மை, பாராட்டுதல் ஆகியவை தேவை என்பதை தலைமை பண்பு வலியுறுத்துகிறது. இந்நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சிக்கு முனைவர் ஜே.ஜாஸ்பர் ஞானச்சந்திரன் (EEE), பேராசிரியர் பி.அன்னப்பாண்டி மற்றும் உதவி பேராசிரியர் s.செல்வகுமார் ஏற்பாடு செய்திருந்தனர்'

## செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறை TECHOLYMPICS'22 தேசிய தொழில்நுட்ப கருத்தரங்கு!



AI&DS மற்றும் CSBS துறைகளின் செயல்முறை விளக்கம் வெளியிடப்பட்டது.

நெல்லை வண்ணார் பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறை (AI&DS, CSBS மற்றும் கணினி அறிவியல் மற்றும் வணிக அமைப்பு (CSBS) ஆகியவை இணைந்து இந்திய கண்டுபிடிப்பு கவுன்சிலுடன் இணைந்து 1வது தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தங்கை (TECHOLYMPICS'22) நடத்தியது. இதில் இந்தியா வின் பல்வேறு பல்கலைக்கழகங்கள், பொறியியல் கல்லூரிகளில் இருந்து மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியில் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறை மற்றும் கணினி அறி வியல் மற்றும் வணிக அமைப்பு ஆகியவை இணைந்து இந்திய கண்டுபிடிப்பு கவுன்சிலுடன் இணைந்து 1வது தேசிய அளவிலான கருத்தரங்கை நடத்தியது. இதில் இந்தியாவின் பல்வேறு பல்கலைக்கழகங்கள், பொறியியல் கல்லூரிகளில் இருந்து மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

பல்வேறு முன்னணி நிறுவனங்களில் பணியாற்றும் எப்.எக்ஸ். கல்லூரியின் முன்னாள் மாணவரான இன்போசிஸ் நிறுவனத்தில் பணியாற்றும் FXEC இன் முக்கிய முன்னாள் மாணவர்களில் ஒருவரான, Infosys-இன் மென்பொருள் பொறியாளர் திரு.அசருதீன் விழாவிற்கு தலைமை தாங்கி கருத்தரங்கை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், 'வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களில் திறன்களைப் பெறுவதன் முக்கியத்துவம் குறித்தும் வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டிய திறன்களை தொடர்ந்து மேம்படுத்துவதையும் வலியுறுத்தினார்.



கல்லூரி முதல்வர் V.வேல்முருகன் பரிசு வழங்குகிறார்



துறை பேராசிரியர்களுடன் கல்லூரி மாணவ, மாணவியர்.

சமூகத்தை மேம்படுத்த பொறியாளர்களின் பங்கு குறித்து முதல்வர் டாக்டர் .வி.வேல் முருகன் பேசினார் AI & DS, CSBS ஆகியவற்றில் இருந்து தேசிய அளவிலான திட்டப் போட்டிகளில் வென்ற மாணவர்களையும், விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களையும் அவர் கௌரவித்துள்ளார். பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரி களில் இருந்து வருகை தந்த 224 மாணவர்கள் தொழில் நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத நிகழ்வுகளில் பங்கேற்று வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களில் தங்கள் அறிவைப் பகிர்ந்து கொண்டனர். இதனை யடுத்து நடந்த போட்டி களிலும் பங்கேற்று பரிசுகளை வென்றனர். இந்நிகழ்ச்சிகளை

உதவி பேராசிரியர் அருணா தேவி, (AI&DS) மற்றும் உதவி பேராசிரியர் அனிதா, (CSBS) ஆகியோர் ஒருங்கிணைத்தனர். பேராசிரியர் மற்றும் மருத்துவர் டாக்டர். A.அனிதா (AI&DS) மற்றும் பேராசிரியர் மற்றும் டாக்டர். S.கோமதி (CSBS) ஆகியோர் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர்.

. இந்த நிகழ்ச்சிக்கு ஊக்கம் அளித்த பொதுமேலாளர்கள் K .ஜெயக்குமார், S.கிருஷ்ண குமார், கல்லூரி முதல்வர் முனைவர் வேல்முருகன் மற்றும் துறை பேராசியர்கள் உள்ளிட்டோரை ஸ்காட் கல்வி குழும நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் அருண்பாபு ஆகியோர் பாராட்டினர்

## எப்.எக்ஸ். வாசகர் சங்கம் - NDLI இணைந்து கட்டுரை விவரிப்பு போட்டி

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியின் வாசகர் சங்கம் NDLI கிளப் இணைந்து அனைத்துத் துறை மாணவர்களுக்கும் "கதை விவரிப்புப் போட்டியை" ஏற்பாடு செய்தது. மாணவர்களிடையே வாசிப்புத் தூண்டுதலை உருவாக்குவதற்கான குறிக்கோளுடன், இந்த போட்டியில் 110 மாணவர்கள் தீவிரமாக பங்கேற்றனர். மாணவர்களால் தயாரித்த கதை விவரிப்பு வீடியோ வரிசை சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும் அவர்களின் கதை விவரிப்பு வீடியோக்கள் வெகுமதிக்காக பகுப்பாய்வு செய்யப் பட்டன. திருமதி வேதன்பு லிபர்டின் கிறிஸ்டியனா (IV ECE B) முதல் பரிசையும், A.சுனில் ராஜா (III CSE B) இரண்டாம் பரிசையும், K.முருகன் நாக ராஜன் (III CSE B) மூன்றாம் பரிசையும் வென்றனர். இதில் பங்கேற்பாளர்கள் மற்றும் வெற்றியாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப் பட்டது.







# முதல் ஆண்டு மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு பயிலரங்கம்!



(AI&DS) முதல் ஆண்டு மாணவர்களுக்குவேலைவாய்ப்பு பயிற்சி உரை

செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறை (AI&DS) முதல் ஆண்டு மாணவர்களுக்காக புகழ்பெற்ற பன்னாட்டு நிறுவனங்களில் உயர் செமஸ்டர் மாணவர்களுடன் ஒரு தொழில் நுட்ப தொடர்பு அமர்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மெல்லொவ் டெக்னாலஜி நிறுவனத்தில் இடம் பெற்ற 3ம் ஆண்டு ஐடி துறையை சேர்ந்த மாணவர் திரு.ஷேக் அப்துல்லா, குறியீட்டுத் திறன்களின் முக்கியத்துவம் மற்றும் அதிக சம்பளத்துடன் (HIGH PACKAGE) வேலைவாய்ப்பு பெறுவதற்கான தகுதி குறித்து புதிய மாணவர்களுடன் உரையாடினார். மேலும் திறன் மற்றும் ப்ரோக்ராமிங்கில் (Programming) பல தேர்ந்தெடுப்பதற்கான கேள்விகளை தயாரிப்பதற்கான எளியவழிகளைப் பகிர்ந்தார். மேலும், வேலைவாய்ப்பு தேர்வின் போது முக்கியமான தகுதி அளவுகோலாக நேர மேலாண்மையை பற்றி அவர் சுட்டிக் காட்டினார்.

மேலும் வேலைவாய்ப்பை எதிர்கொள்வது, கற்றல் வளங்களைக் கண்டறிதல், திறன்களைத் தீர்ப்பதற்கான குறுக்கு வழிகளைக் கற்றுக் கொள்வது மற்றும் தகவல் தொடர்புத் திறன்களின் முக்கியத்துவத்தைப் பற்றிய தங்களது சந்தேகங்களை மாணவர்கள் தெளிவுபடுத்தினர். வேலைவாய்ப்புகளை பெறுவதற்காக, என்ன படிக்க வேண்டும்? எப்படி படிக்க வேண்டும் என்பது குறித்து மாணவர்களுக்கு அவர் விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும், மாணவர்கள் சான்றிதழ் படிப்புகள் மற்றும் ஆன்லைன் குறியீட்டு சவால்கள் மூலம் தொடர்ந்து விண்ணப்பிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். இக்கூட்டத்தில் 56 மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்வில் துறை பேராசிரியர் முனைவர் A.அனிதா பேசுகையில், ஒரு வெற்றிகரமான பொறியாளராக ஷேக் அப்துல்லா கடின உழைப்பு மூலம் முந்தைய சாதனைகள் மற்றும் தொழில் நுட்ப களத்தில் அவர் மாற்றியமைக்கும் சிறப்பான நிலைகளை எடுத்துரைத்தார். இந்த நிகழ்வை துறை பேராசிரியர் M.அருணா தேவி, (AP/AI&DS) ஏற்பாடு செய்தார். இந்தப் பயிற்சிக்கு ஊக்கம் அளித்த கல்லூரி மேலாளர்கள், கல்லூரி முதல்வர் ஆகியோரை கல்லூரி நிறுவனர் கிளிட்டஸ்பாபு, நிர்வாக இயக்குநர் C.அருண்பாபு பாராட் டினர்.

## திருவனந்தபுரம் கணினி மேம்பாட்டு மையம் பார்வையிடுதல்



கணினித் துறை 3ம் ஆண்டு மாணவர்கள்

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியின் கணினி (CSE) துறையின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் 47 பேர் திருவனந்தபுரத்தில் உள்ள மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்திய தன்னாட்சி அறிவியல் சமூகமான மேம்பட்ட கணினி மேம்பாட்டு மையத்திற்கு (C-DAC) வருகை தந்து பார்வையிட்டனர்.

அந்நிறுவனத்தின் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் விஞ்ஞானி திரு. ஹிரோன் போஸ், (STDC) VLSI & உட்பொதிக் கப்பட்ட அமைப்புகள்), மற்றும் மென்பொருள் தொழில் நுட்பங்கள் (FOSS உட்பட)சைபர் பாதுகாப்பு மற்றும் சைபர்ஃ போரென்சிக்ஸ் மற்றும் சுகாதார தகவல்.குறித்து மாணவர்களுக்கு விளக்கம் அளித்தார்.

கல்லூரி சார்பில் இண்டஸ்ட்ரியல் பார்வையிடுதல் ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பளர்கள் உதவிப் பேராசிரியர் P.அனிஷ்யா, (CSE), உதவிப் பேராசிரியர் .முனைவர் R.சுமன் (வேதியியல்) மற்றும் மாணவ ஒருங்கிணைப்பாளர்கள் மோகன் ராஜ்,சுமித்ரா ஆகியோர் செய்திருந்தனர்.

# எப்.எக்ஸ். கல்லூரி விளையாட்டுப் போட்டி ஆண்டு விழா: நெல்லை காவல்துறை ஆணையர் சந்தோஷ் குமார், I.P.S., பங்கேற்பு!

நெல்லை வண்ணார்பேட்டை பிரான்சிஸ் பொறியியல் கல்லூரியில் நடந்த 2022ம் ஆண்டுக்கான விளையாட்டு போட்டி விழாவில் நெல்லை மாநகர காவல்துறை ஆணையர் சந்தோஷ் குமார், I.P.S., சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி மாணவர்கள் பல்வேறு விளையாட்டு போட்டிகளில் சாதனை படைத்து வருகின்றனர். ஏற்கனவே, மாநில அளவிலான பின்னோக்கிய (BACK STROKE) நீச்சல் போட்டியில் செயற்கை நுண்ணறிவு மற்றும் டேட்டா சயின்ஸ் துறை முதலாண்டு மாணவர் ஆலென் ரோல் தங்கம் மற்றும் வெண்கல பதக்கத்தை வென்றார். சேலத்தில் நடந்த 49வது தமிழ்நாடு மாநில ஜூனியர் ஓபன் ஃபைட் ரேட்டேட் (FIDE RATED) செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் S.பிரகாஷ் ராஜ் (EEE) 3ம் ஆண்டு மாணவர் கலந்துகொண்டார். உத்தரபிரதேச மாநிலம் பெரெலியில் உள்ள ரோஹில் காந்த் பல்கலைக்கழகத்தில் நடந்த செபக்டக்ரா (SEBACK TAKRAW) போட்டியில் R.நடராஜன் (AI&DS) முதலாம் ஆண்டு மாணவர் அண்ணா பல்கலைக்கழகம் சார்பில் விளையாடி கல்லூரிக்கு பெருமை சேர்த்தார்.

இந்த ஆண்டுக்கான விளையாட்டு போட்டியில் கைப்பந்து, கூடை பந்து, கபாடி, கோகோ மற்றும் தடகள போட்டிகள் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் ஐ.டி துறை இறுதி ஆண்டு மாணவர் அன்பு சிரஞ்சீவியும், பெண்கள் பிரிவில் மாணவி லிஸ்பா (AI&DS) 'தனிப்பட்ட சாம்பியன்ஷிப்' (INDIVIDUAL CHAMPIONSHIP) வென்றனர்.

இந்த விளையாட்டு போட்டி விழாவுக்கு ஸ்காட் கல்லூரி கல்வி குழும நிறுவனர் S.கிளிட்டஸ் பாபு தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக நெல்லை மாநகர் காவல்துறை ஆணையர் சந்தோஷ்குமார், I.P.S., கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர், மாணவியரை பாராட்டி பரிசு கோப்பைகள் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் ஆகியவை வழங்கி பாராட்டினார்.

விழாவில் நிர்வாக இயக்குநர் அருண்பாபு, பொதுமேலாளர் (வளர்ச்சி) முனைவர் K.ஜெயக்குமார், பொதுமேலாளர் (நிர்வாகம்) S.கிருஷ்ணகுமார், முதல்வர் முனைவர் V.வேல்முருகன் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். இந்த விளையாட்டு போட்டி விழாவுக்கான ஏற்பாடுகளை வளாக மேலாளர் பேராசிரியர் J.சகாரிய கேபிரியல் வழிகாட்டுதலின்படி உடற்கல்வி இயக்குநர்கள் P.சுரேஷ்குமார், P.சாமுவேல் அமர்நாத், V.நந்தினி ஆகியோர் செய்திருந்தனர்



காவல்துறை ஆணையர் சந்தோஷ்குமார் IPS., வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கினார்.



மாணவர்கள் அணிவகுப்பு மரியாதை



பெண்கள் பிரிவு சாம்பியன் லிஸ்பாவுக்கு பரிசு



முதல் 3 இடங்களில் வெற்றி பெற்ற மாணவர்களுடன் காவல்துறை ஆணையர்.



ஒலிம்பிக் ஜோதியை மாணவர்கள் ஏற்றினர்.



கல்லூரி மாணவிகள் கலை நிகழ்ச்சி

செய்திகள் உள்ளே...








# எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி 22ம் ஆண்டுவிழா: மாணவர்கள் கடுமையாக உழைத்து சாதனை பெற வேண்டும்!

## ஸ்காட் கல்வி குழும கல்லூரி நிறுவனர் s.கிளிட்டஸ் பாபு பேச்சு

: நெல்லை வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூயின் 22ம் ஆண்டு விழா கோலாகலமாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக டிசிஎஸ் நிறுவன வேலை வாய்ப்புத் துறை உயரதிகாரி P.விக்னேஷ் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசு களை வழங்கினார். ஸ்காட் கல்வி குழும நிறுவனர் s.கிளிட்டஸ் பாபு தலைமை தாங்கினார்.

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி 22 வருடங்களாக பொதுமக்களின் பேராதரவுடன் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியின் 22ம் ஆண்டு விழா கல்லூரி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கு ஸ்காட் கல்வி குழும நிறுவனர் முனைவர் s.கிளிட்டஸ் பாபு தலைமை தாங்கினார்.

அப்போது அவர் பேசுகையில், டி.சி.ஸ் நிறுவனத்தில் எச்.ராக வேலைவாய்ப்புக்காக தேர்வு செய்யும் தலைமை அதிகாரியாக 29 வயது இளைஞர் திரு விக்னேஷ் சிறப்பு விருந்தினராக பங்கேற்றிருக்கிறார்.

இந்தியா அளவில், தேசிய அளவில் அதிகமான இளைஞர்களை பணியமர்த்தக்கூடிய பணியினை டி.சி.எஸ் நிறுவனம் செய்து வருகிறது. இந்த ஆண்டு மட்டும் 1 லட்சத்துக்கு மேல் ஆள்களைத் தேர்வு செய்கிறார்கள். மாணவர்கள் கடுமையாக உழைத்து சாதனை படைக்க வேண்டும்.விக்னேஷ் 29 வயதில் சாதித்ததை மாணவர்கள் 22 வயதிலே சாதிக்க வேண்டும். நம்பிக்கையின் அடிப் படையில் தான் ஒவ்வாரு செயலும் நடைபெறுகிறது. ஒரு மனிதனோட எண்ணம் போல் தான் அவர் வாழ்வு என்று சொல்வார்கள். இந்த இளம் வயதில் உங்களது உயர்வான சிந்தனை உங்களை உயர்வான இடத்திற்கு அழைத்து செல்லும் எல்லோரும் மனதில் என்ன நினைக்கிறீர்களோ அதனை சாதித்து காட்டுவீர்கள். எந்த சம்பளத்தில் வேலை கிடைக்கும் என்று நினைக் கிறீர்களோ, அதை விட உங்களுக்கு மேலான தாக வேலை வாய்ப்பு கிடைக்கும். நீங்கள் உயர்வான எண்ணத்தோடு, உயர்வான சிந்தனையோடு உயர்ந்த இடத்திற்கு போக வேண்டும். அடுத்த ஆண்டு எல்லோருமே டிசிஎஸ் போன்ற உயர்ந்த நிறுவனங்களில் சேர வேண்டும் ஒவ்வாருவரின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்று வாழ்த்துக்களை கூறிக் கொள்ள விரும்புகிறேன். இவ்வாறு அவர் பேசினார். கல்லூரி முதல்வர் v.வேல் முருகன் ஆண்டறிக்கை யையும், மாணவர்களின் சாதனை களையும் பட்டியலிட்டு பேசினார். சிறப்பு விருந்தினராக டிசிஎஸ் நிறுவன




கல்லூரி நிறுவனர் முனைவர் கிளிட்டஸ் பாபு உரையாற்றினார்.




பொதுமேலாளர் கே.ஜெயக்குமார் பொன்னாடை அணிவித்து மரியாதை




கல்லூரி நிறுவனர் s.கிளிட்டஸ்பாபு மற்றும் பொதுமேலாளர்கள், முதல்வர், பேராசிரியர்களுடன் பரிசு பெற்ற மாணவர்கள் உள்ளனர்

வேலைவாய்ப்பு துறை தலைமை அதிகாரி P.விக்னேஷ் (தமிழ்நாடு & பாண்டிச்சேரி) கலந்து கொண்டு பேசினார்.

குறும்பட இயக்குநர் சுபாஷ் கல்யாண் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட. ஸ்காட் கல்வி குழும துணைத் தலைவர் முனைவர் J.X.அமலி கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் c.அருண்பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்

.அனைத்து துறைகளில் சாதனை படைத்த மாணவர்களுக்கும், அரசு நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள், ப்ாராட்டு சான்றிதழ் கல்லூரியில் சிறப்பாக பணியாற்றிய பேராசிரியர்களுக்கும் சிறந்த மாணவர்களாக தேர்வு செய்யப்பட்ட சிறந்த மாணவிகள் அபிஷகா, அஸ்வதிமோகன், விஜயதர்ஷினி, பெமிஷா ஜெனி, பியூலா, திவ்யலட்சுமி மற்றும் வைஸ் சேர்பெர்சன் அவார்ட் அஸ்வினி ஆகியோருக்கு பரிசுகள் வழங்கப் பட்டன.

சிறந்த அப்லைட் லேப் பெர்பாமெர் சங்கர இசை செல்வம், சிறந்த ஆராய்ச்சியாளர் முனைவர் முத்துக் குமரன், .சிறந்த துறையாக ece, சிறந்த கிளப் நூலகர் பிரபு

சிறந்த ஆராய்ச்சியாளர் மாணவி ஜனனி, அம்பாஸிடர் ரத்னா சபாபதி,




கல்லூரி மாணவிக்கு டிசிஎஸ்.விக்னேஷ் பரிசு வழங்குகிறார்.





மாணவ, மாணவியரின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள்



சிறந்த செயல் பாட்டாளர்கள் ஐசக் ஜான், ராஜ்கமல், பாலாஜி ஆகியோருக்கு பரிசுகள் வழங் கப்பட்டன.

விழாவில், மாணவ, மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்ச்சிகளும் கோலா கலமாக நடைபெற்றன.

விஜய் டிவி புகழ் நடிகர் பாலா, விக்கி ஆகியோரின் நகைச்சுவை நிகழ்ச்சி மாணவர்களை வெகு வாக கவர்ந்தன.

இந்த ஆண்டு விழா நடைபெறுவதற்கு பெருமுயற்சி மேற்கொண்ட பொதுமேலாளர்கள் முனைவர் K.ஜெயக் குமார், s.கிருஷ்ண குமார், கல்லூரி முதல்வர் V.வேல் முருகன், வளாக மேலாளர் J.சகாரியா கேபிரியேல், வேலைவாய்ப்புத்துறை டீன் முனைவர் A.ஞான சரவணன், பயிற்சித்துறை டீன் முனைவர் S.பாலாஜி, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்டோரை ஸ்காட் கல்வி குழும நிறுவனர் முனைவர் s.கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் c.அருண்பாபு ஆகியோர் பாராட்டினர்.

ஆண்டு விழா நிகழ்ச்சியை எம்.பி.ஏ. மாண விகள் தீபலட்சுமி, தனிஷா மற்றும் ஸ்டெல்லா ஆகியோர் தொகுத்து வழங்கினார்.




எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி 22ம் ஆண்டு விழாவில் மாணவ, மாணவியர் வரவேற்பு நிகழ்ச்சி

## உலக இரத்த தான தினம் எப்.எக்ஸ். கல்லூரி- I.M.A இணைந்து இரத்த தான முகாம்!

நெல்லை வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் உலக ரத்த தான தினத்தையொட்டி கல்லூரியின் இளைஞர் செஞ்சுலுவைச்சங்கம், இந்தியன் மெடிக்கல் அசோஸி யேஷனும் (IMA) இணைந்து இரத்த தான விழிப்புணர்வு முகமை நடத்தியது.




உலக இரத்த தான தினம் ஜூன் 14ம் தேதி கடைபிடிக்கப்படுகிறது. தினத்தையொட்டி எப்.எக்ஸ். பொறி யியல் கல்லூரியின் இளைஞர் செஞ் சிலுவைச் சங்கமும், இந்தியன் மெடிக்கல் அசோஸி யேஷன் (IMA) இணைந்து கல்லூரியில் உலக இரத்த தான கொடையாளர் தினத்தை கொண் டாடியது. இந்நிகழ்ச்சியில் IMA தலைவர் டாக்டர் ரூபஸ் பொன் னையா, முன்னாள் தலைவர் பாலகிருஷ்ணன், செயலாளர் டாக்டர் ராஜா விக்னேஷ், இணை செயலாளர் பிரபுராஜ், டாக்டர் முகமது இப்ராஹிம், லட்சுமி மாதவன் மருத்து வ மனை டாக்டர் மாணிக்க வாசகம் ஆகியோர் கலந்து கொண்டனர். கல்லூரி முதல்வர் வேல்முருகன் வரவேற்பு ரையாற் றினார். மனித உயிர்களை காப்பாற்றுவதற்கு இரத்த தானம் மிகவும் அவசியம் என்று நிகழ்ச்சி யில் வலியுறுத்தப் பட்டது. இந் நிகழ்ச்சியை எம்.பி.ஏ. மாணவி கள் தீபலட்சுமி, தனிஷ்கா ஆகி யோர் தொகுத்து வழங்கி னார்கள். இந்த முகாமில் 200 மாண வர்கள் கலந்துகொண்டு இரத்த தானம் செய்தனர்.

இந்நிகழ்வை கல்லூரி வளாக மேலாளர் சகாரியா கேப்ரியல் மற்றும் இளைஞர் செஞ்சுலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர் J.டேவிட் அய்லிங் ஆகியோர் செய்திருந் தனர்.

## TCS நிறுவன வேலைவாய்ப்பு அதிகாரியுடன் FX மாணவர்கள் வேலைவாய்ப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சி!

நெல்லை வண்ணாரப்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் TCS நிறுவன வேலைவாய்ப்பு தலைமை அதிகாரி பி.விக்னேஷ் கல்லூரி மாண வர்களுடன் கலந்துரையாடல் நிகழ் ச்சி நடை பெற்றது

பிரான்சிஸ் சேவியர் பொறி யி யல் கல்லூரியில் இறுதி ஆண்டு படிக்கும்போதே மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம் நடைபெற்று வருகிறது. அண்மை யில் 81 மாணவர்கள் டி.சி.எஸ். நிறுவனத்தில் வேலையில் சேர்ந்து ள்ளனர். இதற்காக தொழில் நுட்ப நிறுவன ங்கள் போன்று கல்லூரி யில் நவீன வசதிகளுடன் கூடிய ஆய்வ கங்கள் உள்ளன. அதில் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சி, செயல் திறன் பயிற்சிகள் அளிக்கப் படுகிறது.




மாணவர்களுடன் TCS HR P.விக்னேஷ் . பேராசிரியர்கள் முனைவர் ஞானசரவணன் முனைவர்பாலாஜிஉள்ளனர்.

இதனிடையே கல்லூரியின் அப்துல் கலாம் அரங்கில் டி.சி.எஸ். வேலைவாய்ப்பு தலைமை அதிகாரி P.விக்னேஷ் தலை மையில் மாணவர்கள் கலந்து ரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கணினி துறை மாண வர்கள், சி.எஸ்.பி.எஸ் மற்றும் ஐ.டி துறை மாணவர்கள் கலந்து கொண்டனர். வேலைவாய்ப்பு துறை பயிற்சி துறை டீன் முனைவர் ஞான சரவணன் வரவேற்புரையாற்றினர். மாணவர்கள் வேலைவாய்ப்பு குறித்த அனைத்து சந்தேகங் களையும் டிசிஎஸ். H.R. P.விக்னேஷ் கேட்டு

அனைத்து சந்தேகங்களையும் டிசிஎஸ். எச்.ஆரிடம் (H.R) கேட்டு தெரிந்து கொள்ளுமாறு கூறி னார். பயிற்சித் துறை இயக்குநர் முனைவர் பாலாஜி மாணவர்களுக்கு ஆலோச னைகளை கூறினார். பின்னர், டிசிஎஸ். அதிகாரி, பி.விக்னேஷ் பேசுகையில், வேலைவாய்ப்பு பெறுவதற்காக எவ்வாறு படிக்க வேண்டும்? தொழில்நுட்ப ரீதியாக மேற்கொள்ள வேண் டிய பயிற்சிகள் குறித்து விளக் கினார். தொழில்நுட்ப நுணு க்கங்களையும் அவர் விள க்கினார். மாணவர், மாணவியர் கேட்ட அனைத்து கேள்விகளு க்கும் அவர் பதிலளித்தார்.

இந்நிகழ்வில் பேராசிரியர் அன்னபாண்டி உட்பட துறை பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.




TCS HR விக்னேஷுக்கு பொன்னாடை அணிவித்தார்




TCS HR P.விக்னேஷ்- மாணவர் ஜெபின் கலந்துரையாடல்



மாணவி சித்ராபானு கேள்விக்கு TCS HR P.விக்னேஷ் பதிலளித்தார்

## சிவில் துறை தேசிய கருத்தரங்கு: மத்திய ரயில்வே அதிகாரி பங்கேற்பு!

நெல்லை வண்ணார்பபேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் சிவில் பொறியியல் துறை சார்பில் தேசிய அளவிலான கருத்தரங்கு நடைபெற்றது. இதில் மத்திய ரயில்வே அமைச்சக அதிகாரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்

எப்.எக்ஸ். பொறியியல் கல்லூ ரியில் சிவில் பொறியியல் துறை மாணவர்களை ஊக்கு விப்பதற்காக தேசிய அளவிலான கருத்தரங்கை ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் அகில இந்திய அளவில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மத்திய ரயில்வே அமைச்சகத்தின் இரயில் விகாஸ் லிமிடெட் (A Govt. of India Enterprise, Ministry of Railways) மேலாளர் ராஜேந்திர முத்துக்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் பேசிய அவர், ‘சிவில் துறையில் நவீன தொழில் நுட்பங் களை மாணவர்கள் கற்றுக் கொண்டு வேலைவாய்ப்பை பெற வேண்டும்’ என கேட்டுக் கொண் டார்.

இக்கருத்தரங்கில், பேப்பர் பிரசன்டேஷன், (Paper presentation) பிரேக்கர் ஆஃப் கோட்ஸ், (Breaker of codes) டிராஃப்ட்ரிக்ஸ் (Draftrix), பாப் தி பில்டர் (Bob the builder), இன்னோ வேட்டிவ் ப்ராஜெக்ட் டிஸ்ப்ளே மற்றும் கிளிக்ஸ் (Innovative project display/clickz,), லோகோ ஃபேண்டஸி (logo fantasy), கனெக்ஷன் (connexion) போன்ற தொழில்நுட்ப செயல் திறன் போட்டிகள் நடத்தப்பட்டன. கல்லூரி முதல்வர் வேல்முருகன்




கல்லூரி முதல்வர் V.வேல்முருகன் நினைவு பரிசு வழங்குகிறார்.

மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். சிவில் பொறியாளர் டாக்டர் ஜின்னி. சிவில் துறை பேராசிரியர் சாமுவேல் பிரபாகரன் (HOD/CIVIL) ஆகியோர் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி யின் சிவில் துறையில் பயிலும் மாணவர்களுக்கு செயல் திறன் பயிற்சியும், திறமை வளர்ச்சியும் (skill development) அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் கட்டுமான பொருள்களுக்கு தரப்பரி சோதனை செய்வது குறித்தும், பிரபல கட்டுமானம் மற்றும் அத னைச் சார்ந்த நிறுவனங்களுக்கு மாணவர்களை அழைத்து சென்று பயிற்சியும் அளிக்கப் படுகிறது.

இதனால் எப்.எக்ஸ் கல்லூ ரியின் சிவில் துறை மாண வர்கள் முன்னணி நிறுவ னங்களில் சிறந்த முறையில் வேலைவாய்ப்பை பெற்று ள்ளனர்.

இந்த கருத்தரங்குக்கு ஊக் கம் அளித்த கல்லூரி பொது மேலாளர்கள் முனைவர் K. ஜெயக்குமார் (வளர்ச்சி) மற்றும் S.கிருஷ்ணகுமார் (நிர்வாகம்), கல்லூரி முதல்வர் V.வேல் முருகன், வளாக மேலாளர் J.சகாரியா கேப்ரியல் உள்ளிட் டோரை ஸ்காட் குழும நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் C.அருண் பாபு ஆகியோர் பாராட்டினர்.

## எப்.எக்ஸ் ரீடர்ஸ் கிளப்- என்.டி.எல்.ஐ (NDLI)கிளப் இணைந்து 'புக் எக்ஸ்போ - 2022'

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் கல்வி மட்டும் வேலைவாய்ப்புக்காகவும் கல்லூரி நிர்வாகம் மாணவர்கள் வாசிப்பு திறனை மேம்படுத்துவதற்காகவும் சிறந்த நூலகத்தை எப்.எக்ஸ் ரீடர்ஸ் கிளப் (FX READERS CLUB)-ஐயையும் நடத்தி வருகிறது. மாணவர்கள் இளைய தலை முறையினரிடையே குறைந்து வரும் வாசிப்புத் திறனை உயர்த்துவதற்கான சிறந்த முயற்சியுடன், எஃப்எக்ஸ் ரீடர்ஸ் கிளப் (FX READERS CLUB), என்.டி.எல்.ஐ (National Digital Library of India ) கிளப்புடன் இணைந்து “புக் எக்ஸ்போ - 2022” (BOOK EXPO-2022) நிகழ்ச்சியை கல்லூரி நூலகத்தில் ஏற்பாடு செய்தது.




இந்த கண்காட்சியில் பல புத்தகங்கள் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல்வேறு வகைகளில் இருந்து, மாணவர்கள் ஆராய்வதற்கு ஏராளமான புத்தகங்கள், துறை சார்ந்த லேட்டஸ்ட் புத்தகங்கள், பொது அறிவு, ஐ.ஏ.எஸ்., யூ.பி.எஸ்.சி (UPSC) மத்திய அரசின் தேர்வுகள், வங்கித் தேர்வுகள் மற்றும் பிரபல எழுத்தாளர்கள் எழுதிய புத்தகங்களும் இடம்பெற்றிருந்தன. புத்தக கண்காட்சியை கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர் பார்வையிட்டனர். தங்களது அறிவு திறனை மேம்படுத்த புத்தகங்களை வாங்கி பயன் அடைந்தனர். இந்நிகழ்வில் என்.டி.எல்.ஐ (NDLI) பொறுப் பாளர்கள் கல்லூரி முதல்வர் V.வேல்முருகன், கிளப் தலைவர் பேராசிரியர் M.A.ஆஷா, (சிவில்), உதவி பேராசிரியர் B.பிரதீப், T.ராஜன் (ECE) (எக்சிகியூடிவ் மெம்பர்) ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை எப்.எக்ஸ் ரீடர்ஸ் கிளப் ஒருங்கிணைப்பாளர்கள் உதவி பேராசிரியர் P.அனிஷ்யா (CSE) நூலகர் T.பிரபு செய்திருந்தனர்.




மாணவர்கள் புத்தகங்களை ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.